**பெந்தொட்ட பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பெந்தொட்ட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பெந்தொட்ட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக செலவு கடன்கொடுத்தோர் ஏற்பாடு ரூபா 119,506 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தலைமை அலுவலகத்தை நவீனமயமாக்களின் தடுத்து வைத்தல் பணம் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், அதனை அகற்றப்பட்டிருக்காமையால் செலுத்த வேண்டிய வைப்பு மீதி ரூபா 523,738 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | எலகந்த விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு ரூபா 500,000 தொகை மற்றும் சம்பளமற்ற விடுமுறைக்காக கடன்பட்டோர் ஏற்பாடு ரூபா 118,000 தொகை மிகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய பங்களிப்புத் தொகைக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 5,049,029 இற்கான மீதிக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொண்டிருந்த ரூபா 674,434 இற்கான பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மிகையாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 361,623 இற்கான நிரந்தர பதவியணியில் செலுத்த வேண்டிய சம்பளம் மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 122 மற்றும் 126 இல் (vii)(ஏ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் முச்சக்கர வண்டி தரிப்பு நிலையங்களுக்காக துணைச் சட்டங்கள் சட்டவாக்கம் செய்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | துணைச் சட்டங்களுக்கான அங்கீகாரம் கிடைத்த பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | துணைச் சட்டங்கள் சட்டவாக்கம் செய்து வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் 104 | பெக்கோ இயந்திரத்தின் பக்கக் கண்ணாடி உடைந்திருந்ததுடன், அதற்காக ஏற்பட்டிருந்த ரூபா 164,150 இற்கான நட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வாகன விபத்துக்கள் தொடர்பாக பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 1.7.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு நாளைக்கு வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் இடையே 04 தடவைகள் பிரயாணம் செய்வதற்காக செயலாளரினால் தொகுதி வாகனமின்றி சபையின் வாகனத்தை பயன்படுத்தி இருந்ததுடன் அதன் எரிபொருளுக்காக ரூபா 360,875 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பிரயாண தடவைகள் எண்ணிக்கையை 04 தடவைகளிலிருந்து 02 தடவைகள் வரை குறைக்கப்பட்டிருந்தது என. | கிரயம் குறையுமாறு செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 13,768,077 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,950,422 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 25,928,600 | 28,169,572 | 37,873,446 | 18,604,712 | 24,930,030 | 27,281,887 | 20,839,434 | 28,308,586 |
| வாடகை | 2,699,100 | 6,658,350 | 2,624,050 | 49,000 | 1,854,000 | 1,249,853 | 1,337,355 | 14,700 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 643,150 | 967,645 | 980,502 | 77,388 | 885,400 | 621,766 | 636,171 | 90,245 |
| ஏனைய வரு மானங்கள் | 9,213,710 | 15,739,523 | 16,973,640 | 30,061 | 7,399,100 | 6,970,944 | 6,023,539 | 1,264,178 |
| | ----------- | ------------- | -------------- | -------------- | -------------- | -------------- | -------------- | -------------- |
| | 38,484,560 | 47,535,090 | 58,451,638 | 18,761,161 | 35,068,530 | 36,124,450 | 28,836,499 | 29,677,709 |
| | ======= | ======= | ======= | ======= | ======= | ======= | ======= | ======= |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி வருமானம் ரூபா 28,308,586 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 18,604,712 தொகையாக இருந்தது. தலைமை அலுவலகத்தை சேர்ந்த சபையின் அதிகாரப் பிரதேசங்களில் காணப்படுகின்ற 6501 வீதவரி அலகுகளில் ரூபா 2,182,037 இற்கான பெறுமதியுடைய 924 அலகுகளில் 10 வருடங்களை விட மிகையான காலம் முதல் வரி செலுத்துவதை புறக்கணித்திருந்தனர். இந்துருவ உப அலுவலகத்தை சேர்ந்த 446 வரி அலகுகளில் 26 அலகுகளில் இருந்து ரூபா 10,000 இற்கு மிகையான தொகைகள் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,701,292 தொகை காணப்பட்டது. | நிலுவை வீதவரி அறவீடு செய்தல் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வீதவரி மறறும் வரி வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 159(2) இற்கு இணங்க குப்பை வரி அறவீடு செய்வதற்காக துணை சட்டங்கள் சட்டவாக்கம் செய்திருக்காததுடன் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற 14 நிறுவனங்களில் இருந்து மாத்திரம் ரூபா 448,000 தொகை குப்பை வரி என அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதிகாரப் பிரதேசத்தில் இனங்கண்டிருந்த 238 சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தங்குமிடங்களில் இருந்து குப்பை வரி அறவீடு செய்வதற்காக அறுதியான செய்முறை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | குப்பை வரி செலுத்தாத நிறுவனங்களை இனங்காணப்பட்டுள்ளது என. | குப்பை வரி வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 70 அறிவித்தல் பலகைகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 241,230 இற்கான கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | கட்டணம் செலுத்தாத அறிவித்தல் பலகைகள் தொடர்பாக சட்ட செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளது என. | நிலுவை அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சுற்றுலா சபையில் பதிவு செய்திருந்த 06 ஹோட்டல்கள் 2017 ஆண்டு முதல் 1 சதவீத அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தியிருக்கவில்லை. | 0.5% வரை குறைப்பதற்கான பிரேரணையை கௌரவ ஆளுனரினால் அங்கீகாரம் கிடைக்கப்பட்டுள்ளது எனவும் செலுத்தியிருக்காத நிறுவனங்களுக்காக 2019 ஆண்டு முதல் 2023 ஆண்டு | உச்சமட்ட வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வரை நீதிமன்ற தீர்ப்பின் படி அறவீடு செய்யப்படவுள்ளது என. | |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 80,000 மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 31,110,878 தொகை காணப்பட்டது. | முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் குறிப்பிட்ட ஆண்டிலேயே கிடைக்கப் பெறாமையால் ஆண்டிற்குரிய மதிப்பீட்டு பெறுமதி மீது கணக்குகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,280,681 தொகைக் கிரயத்தையுடைய JCB வாகனம் 05 வருட காலம் முதல் பெந்தொட்ட சபையின் வேலை அலகு வளாகத்தில் சுற்றாடலுக்கு திறந்தவாறு விளைவற்று நிறுத்தப்பட்டிருந்ததுடன் இதனை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இயந்திரப் பொறியியலாளரின் பரிசோதனை அறிக்கைக்கு இணங்க தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பதிவு இலக்கத்தை இனங்காண முடியாத உக்கிய டிரக்டர் டேலர் ஒன்றின் சிதைவடைந்த பகுதியில் மற்றும் 2020 ஆண்டில் அப்புறப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த ஹய்டோ கப் வண்டியொன்று அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அப்புறப்படுத்தும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்ய வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரினால் வெளியிடப்பட்டிருந்த சுற்றறிக்கை இலக்கம் 4/04/01/2021 இற்கு இணங்க சந்தை வாடகை சேகரிப்பதற்காக ஆதனங்களை தடைசெய்யும் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதிலும் | எதிர்காலத்தில் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி மாத்திரம் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கைக்கு இணங்க நிலுவைத் தொகையில் 75 சதவீதம் அறவிடப்பட்டிருந்தால் 12 சதவீத கமிஷன் ஒன்று செலுத்த இயலுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக வருமானம் சேகரிக்கும் சதவீதம் 1 சதவீதத்திற்கும் 11 சதவீதத்திற்கும் இடைப்பட்டு காணப்பட்டதுடன் சபையினால் கமிஷன் தொகையாக அந்த உத்தியோகத்தருக்கு ரூபா 530,421 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 12 ஏக்கர் 25 ரூட் 25 பர்சஸ் அளவான 48 காணித் துண்டுகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுமதி மதிப்பீடு செய்யப்படவுள்ளது என. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 3 ஏக்கர் 17 ரூட் 04 பர்சஸ் அளவான 18 காணித் துண்டுகள் வெற்றுக் காணிகளாக காணப்பட்டதுடன் அவற்றை ஆக்கபூர்வமான அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பல்வேறு பயிர்கள் பயிர்செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் ஆக்கபூர்மாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹிபன்வத்த பொது விளையாட்டுத் திடல் அபிவிருத்தி செய்யும் போது வேலை விடய இலக்கங்கள் 2.1, 3.1, 3.2 மற்றும் 3.3 இன் கீழ் முறையே இயந்திரங்களை பயன்படுத்தி மண் வெட்டுதல், பக்கச்சுவரின் அத்திவாரம் வெட்டுதல், அதற்காக கொங்கிரீட் பண்ணுதல், பிலம் கொங்கிரீட் பண்ணுதல் ஆகியவற்றிற்காக உரிய ரேட்கள் பயன்படுத்தப்படாத காரணத்தினால் மேற்கூறிய வேலை விடயங்களுக்காக முறையே ரூபா 673,873 தொகை, ரூபா 158,949 தொகை, ரூபா 56,734 தொகை மற்றும் ரூபா 203,741 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | மண் வெட்டுதல் EW 16 பயன்படுத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது எனவும் அத்திவாரம் வெட்டுதல் மனித உழைப்பின் மீது மேற்கொள்ளப்பட்டது எனவும் கொங்கிரீட் பண்ணுதல் மற்றும் ct-35 ரேட் பயன்படுத்தப்பட்டது என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் சேவையாற்றி, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் ஓய்வுபெற்றுள்ள 04 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 88,409 இற்கான கடன் மீதியொன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அறவீடு செய்யப்பட வேண்டிய நிலுவை ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |